[9th August 1966

அரசாங்க ஊழியர்கள் குறைப்பு

* 299 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி
திரு. கரு. சீமைச்சாமி
திரு. செ. மாதவன் } . கனம் முதல்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில், இந்த ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து, அரசாங்கத்தில் பணிபுரியும் குமாஸ்தாக்கள் ஆட் குறைப்பு செய்யப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர்களை வேலையிலிருந்து எடுத்துவிட முடிவு செய்யப்பட்டுள்ளது, மாவட்டவாரியாக ?

(உ) இதனால் அரசாங்கத்திற்கு மீதமாகும் தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ)—(உ) சபை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, 1—10—1965-க்குப் பின்னாலே வேலையில் சேர்ந்துள்ளவர்கள் வேலை இழக்க நேரிடும் என்பதாக முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தேதிக்குப் பிறகு நியமிக்கப்பட்ட குமாஸ்தாக்கள் மட்டும் தான் வேலையில் இருந்து நீக்கப்படுவார்களா ? அந்தத் தேதிக்குப் பின்னால் ஆபீசர் க்ரேடில் அதிகமான பேர்கள் வேலையில் நியமிக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அவர்களும் வேலையை இழக்க நேரிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இந்த ஏற்பாட்டினால் வேலையை இழக்கத்தான் வேண்டும் என்ற நிலை இல்லை. 1—10—1965-க்குப் பிறகு தாற்காலிகமாக வேலையில் சேர்க்கப்பட்டவர்கள் பாதிக்கப்படலாம் என்பது தான். அவர்கள் எப்படி இருந்தாலும் சர்வீஸ் கமிஷனிலிருந்து ஆள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப் பட்டவுடன் பாதிக்கப்படக்கூடியவர்கள்தான். அத்தகையவர்கள் ஒரு சிலர் பாதிக்கப்படலாம் என்பதுதான். இப்பொழுது உடனடியாகப் பாதிக்கப்பட்டாலும் காலிஸ்தானம் விழுந்தவுடன் அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

திரு. செ. மாதவன் : நிர்வாகச் சீர்திருத்தம் காரணமாக யாரும் வேலையை இழக்கும்படியாகச் செய்யக்கூடாது என்பதாக மத்திய சர்க்கார் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறதே, அந்த யோசனையை இந்தச் சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மத்திய சர்க்கார் நமக்கு ஒன்றும் சொல்லவில்லை. இந்தச் சர்க்கார் கருத்தே அதுதான். அது அமல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சிக்கனச் சிரமைப்பு காரணமாக ஜில்லா தோறும் உள்ள கிராம வெட்டியான்கள், தலையாரிகள் கூட பதவியில் இருந்து நீக்கப்பட்டிருக்கிற செய்தி அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க என்ன ஏற்பாடு செய்யப்படும் ?

---

* 994–995-ம் பக்கங்களில் ஏழாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

9th August 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கிராம உத்தியோகஸ்தர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்களா, இல்லையா என்கிற விவரம் என்னிடம் இல்லை. அதற்கும் இந்த நிர்வாகச் சீரமைப்புக்கும் சம்பந்தம் இல்லை. இதன் மூலம் யாரும் வேலை இழக்க நேரிடாது. அரசாங்க விதிகளின் கீழ் தாற்காலிக வேலைக்கு அதிகாரிகள் தாற்காலிகமாகச் சிலரை நியமித்துக்கொள்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக வைத்துக் கொள்ளப்படவேண்டும் என்று சொல்ல முடியாது. எப்போது தாற்காலிகமாக சில ஆட்கள் தேவைப்படுகிறதோ, அப்போது தாற்காலிகமாக நியமித்துக் கொள்கிறார்கள்.

*** 300 கேள்வி.—திரு. அ. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க இலாகாக்களில் சிக்கன நடவடிக்கை எடுத்ததின் பலனாக வேலை இழக்கும் சிப்பந்திகளுக்கு மாற்று உத்தியோகங்கள் அளிப்பதற்கு அரசாங்கம் திட்டம் வகுத்து உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ)—(இ) 1—10—1965 தேதியன்று அல்லது அதற்குப்பிறகு நியமிக்கப்பட்ட உபரிப்பணியாளர்கள் மட்டுமே ஆட்குறைப்புத் திட்டத்தின்படி வேலையிழப்பர். இவர்களும், சிவில் சப்ளைத்துறை, வேளாண்மைத்துறை போன்ற பல்வேறு துறைகளில் அனுமதிக்கப்பட்டுவருகிற புதிய பதவிகளில் நாளடைவில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இவர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு அளிக்கத் தனி நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டிய அளவில் ஆட்குறைப்புத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

UNSTARRED QUESTIONS.

Wild Birds and Animals Protection Act.

1. *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

The forests, tanks, water sources and other sites in the State declared to be areas, wherein shooting of birds or wild animals are prohibited under Wild Birds and Animals Protection Act.

A.—The particulars are appended.

விவரங்கள் பின் இணைப்பில் [a] கொடுக்கப்பட்டுள்ளன.

Procurement and distribution of foodgrains.

2. *Q.*—SRI S. J. RAMASWAMY: Will the Hon. the Minister for Food be pleased to state:—

(*a*) the number of wholesale and retail licences granted for the procurement and distribution of foodgrains in the State so far, district-wise;

(*b*) the number of defaulters among them;

---

[a] Printed as Appendix VIII on pages 995–998.